

# உத்தரிக்கிற ஆத்துமாக்களின் மன்றாட்டு மாலை

ஆண்டவரே, இரக்கமாயிரும்

**ஆண்டவரே, இரக்கமாயிரும்**

கிறிஸ்துவே இரக்கமாயிரும்

**கிறிஸ்துவே இரக்கமாயிரும்**

ஆண்டவரே, இரக்கமாயிரும்

**ஆண்டவரே, இரக்கமாயிரும்**

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

**கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்**

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் நன்றாகக் கேட்டருளும்

**கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் நன்றாகக் கேட்டருளும்**

பரலோகத்தில் இருக்கிற பிதாவாகிய சருவேசுரா,

**எங்கள் மேல் இரக்கமாயிரும்**

உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சருவேசுரா,

**எங்கள் மேல் இரக்கமாயிரும்**

பரிசுத்த ஆவியாகிய சருவேசுரா,

**எங்கள் மேல் இரக்கமாயிரும்**

தூய திரீத்துவமாய் இருக்கிற ஏக சருவேசுரா,

**எங்கள் மேல் இரக்கமாயிரும்**

புனித மரியாயே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

சர்வேசுரனுடைய புனித மாதாவே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

கன்னியர்களுள் உத்தம கன்னிகையே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

புனித மிக்கேலே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

தூதரும் அதி தூதருமாகிய சகல சம்மனசுகளே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

நவவிலாச சபையாயிருக்கிற சகல சம்மனசுகளே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

புனித ஸ்நாபக அருளப்பரே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

புனித சூசையப்பரே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

பிதாப்பிதாக்களும் தீர்க்கதரிசிகளுமாகிய சகல புனிதர்களே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

புனித இராயப்பரே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

புனித சின்னப்பரே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

புனித அருளப்பரே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

அப்போஸ்தலரும் நற்செய்தியாளருமாகிய சகல புனிதர்களே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

புனித முடியப்பரே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

புனித லவுரேஞ்சியாரே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

வேதசாட்சிகளான சகல புனிதர்களே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

புனித கிரகோரியாரே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

புனித அமிர்தநாதரே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

புனித அகுஸ்தீனாரே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

புனித இயெரோணிமுவே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

ஆயர்களும் துதியர்களுமாகிய சகல புனிதர்களே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

வேத வல்லுனரான சகல புனிதர்களே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

குருக்களும் ஆசாரரியருமாகிய சகல புனிதர்களே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

துறவிகளும் தபோதனர்களுமாகிய சகல புனிதர்களே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

புனித மரியமதலேனம்மாளே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

புனித கத்தரினம்மாளே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

புனித பார்பரம்மாளே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

கன்னியர்களும் விதவைகளுமாகிய சகல புனிதர்களே,

மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்

ஆண்டவருடைய அடியார்களாகிய சகல புனிதர்களே,

**மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்**

தயாபரராயிருந்து

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே,**

சகல பொல்லாப்புக்களிலும் நின்று,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே,**

உமது கோபத்திலே நின்று,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே,**

உமது நீதி அகோரத்திலே நின்று,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே,**

பிசாசின் வல்லமையிலே நின்று,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே,**

கொடிய ஆக்கினையிலே நின்று,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே,**

அக்கினிச் சுவாலையிலே நின்று,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே,**

துயரமான அழுகையிலே நின்று,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே,**

உத்தரிக்கிற ஸ்தலத்துச் சிறைச்சாலையிலே நின்று,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே,**

தேவரீருடைய திரு மனித அவதாரத்தைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய மாசில்லாத உற்பவத்தையும் பிறப்பையும் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய மதுரமான நாமத்தைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய பாலத்துவத்தைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய ஞானஸ்நானத்தையும் உபவாசத்தையும் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய மிகுந்த தாழ்ச்சியைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய சுறுசுறுப்பான கீழ்ப்படிதலைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய கிருபையின் மிகுதியையும் அளவில்லாத நேசத்தையும் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய கொடூர உபத்திரவங்களையும் நிர்ப்பந்தங்களையும் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய இரத்த வியர்வையைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய கட்டுண்ட கட்டுக்களைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீர் பட்ட அடிகளைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய திருமுண்முடியைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய திருச் சிலுவையைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய கடூரமான மரணத்தைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய ஐந்து திருக்காயங்களைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய விலைமதியாத திருஇரத்தத்தைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய மகிமையான உத்தானத்தைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேவரீருடைய அதிசயமான ஆரோகணத்தைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

தேற்றுகின்றவராகிய பரிசுத்த ஆவியின் வருகையைப் பார்த்து,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

நடுத்தீர்க்கிற நாளிலே,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

பாவியாயிருந்த மதலேன் அம்மாளுக்குப் பாவமன்னிப்புத் தந்தவரும், நல்ல கள்ளனுடைய மன்றாட்டைக் கேட்டவருமாகிய தேவரீரை மன்றாடுகிறோம்,

**எங்கள் மன்றாட்டை கேட்டருளும்**

மரணத்தின் திறவுகோலையும் நரகத்தின் திறவுகோலையுங் கைக்கொண்டிருக்கிற தேவரீரை மன்றாடுகிறோம்,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

இரட்சணியத்துக்கு உரியவர்களை இலவசமாக இரட்சிக்கிற தேவரீரை மன்றாடுகிறோம்,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

எங்கள் சகோதரர் பந்துக்கள் உபகாரிகளுடைய ஆத்துமங்களை உத்தரிக்கிற ஸ்தலத்திலே நின்று இரட்சித்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

**அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் ஆண்டவரே**

பூலோகத்தில் யாரும் நினையாத சகல ஆத்துமாக்களுக்கும் தயவுசெய்ய வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

**எங்கள் மன்றாட்டை கேட்டருளும்**

கிறிஸ்து நாதரிடத்தில் இளைப்பாறுகின்ற சகலருக்குங் குளிர்ச்சியும் பிரகாசமும் சமாதானமுள்ள தலத்தைக் கட்டளையிட்டருளத் தேவரீரை மன்றாடுகிறோம,

**எங்கள் மன்றாட்டை கேட்டருளும்**

பாவ தோஷத்தால் அவர்களுக்கு உண்டாகின்ற ஆக்கினையைக் குறைக்க வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

**எங்கள் மன்றாட்டை கேட்டருளும்**

அவர்கள் துயரத்தைச் சந்தோஷமாக மாற்றியருளத் தேவரீரை மன்றாடுகிறோம்,

**எங்கள் மன்றாட்டை கேட்டருளும்**

அவர்களுடைய ஆசை நிறைவேறத் தயைபுரிய வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

**எங்கள் மன்றாட்டை கேட்டருளும்**

அவர்கள் உம்மைப் புகழ்ந்து துதிப்பலியை உமக்குச் செலுத்தும்படி செய்தருளத் தேவரீரை மன்றாடுகிறோம்,

**எங்கள் மன்றாட்டை கேட்டருளும்**

உம்முடைய புனிதர்களின் கூட்டத்தில் அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,

**எங்கள் மன்றாட்டை கேட்டருளும்**

சருவேசுரனுடைய குமாரனே தேவரீரை மன்றாடுகிறோம்,

**எங்கள் மன்றாட்டை கேட்டருளும்**

கிருபையின் ஊரணியே தேவரீரை மன்றாடுகிறோம்,

**எங்கள் மன்றாட்டை கேட்டருளும்**

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய யேசுவே,

**எங்கள் பாவங்களைப் போக்கியருளும்**

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய யேசுவே,

**எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்**

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய யேசுவே,

**எங்களுக்குத் தயவுபண்ணி இரட்சியும்**

ஆண்டவரே இரக்கமாயிரும்

**ஆண்டவரே இரக்கமாயிரும்**

கிறிஸ்துவே இரகக்கமாயிரும்

**கிறிஸ்துவே இரக்கமாயிரும்**

ஆண்டவரே இரக்கமாயிரும்

**ஆண்டவரே இரக்கமாயிரும்**

நரக வாசலில் நின்று

**அவர்களுடைய ஆத்துமங்களை மீட்டு இரட்சித்தருளும்**

சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக

**அப்படியாகக்கடவது**

சுவாமி எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

**எங்கள் அபயசத்தம் தேவரீருடைய சந்நிதிமட்டும் வரக்கடவது**

**செபிப்போமாக:**

சகல விசுவாசிகளுடைய சிருட்டிகரும் இரட்சகருமாகிய சருவேசுரா!

மரித்த உமது அடியார்களுக்காகச் செய்யப்படுகின்ற பக்தியுள்ள மன்றாட்டுக்களை ஏற்று அவர்கள் மிகுந்த ஆவலோடு ஆசிக்கிற பாவமன்னிப்பைக் கிருபை செய்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம். சதாகாலமும் சீவியரான சருவேசுரா இந்த மன்றாட்டை தயவோடே கேட்டருளும்.

நித்திய பிதாவே! பெற்றோர் பந்துக்கள் சிநேகிதர் உபகாரிகள் முதலியவர்களைத் தக்கவிதமாய் நேசித்து அவர்களுக்கு வேண்டிய நன்மை செய்யக் கற்பித்தருளினீரே. ஆகையால் எங்களைப் பெற்று அன்போடு வளர்த்த ஆதரித்தவர்களும் பற்பல உபகாரம் எங்களுக்குச் செய்தவர்களும் எங்கள் பந்துக்கள் சிநேகிதர் முதலானவர்களும் வேதனை நீக்கி நித்தியகாலம் உம்மைச் சந்தோஷமாய்த் தரிசித்துக் கொண்டிருக்கத் தேவரீர் கிருபை செய்தருள வேண்டுமென்று மன்றாடுகின்றோம்.

நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்குத் தந்தருளும் சுவாமி,

**முடிவில்லாத பிரகாசமும் அவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது**

சுமாதானத்தில் இளைப்பாறுவார்களாக,

**ஆமென்**

